செய்தி வெளியீடு எண்: 448 நாள் : 15.09.2015

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (15.9.2015) தலைமைச் செயலகத்தில், சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை வளாகத்தில் 39 கோடியே 10 லட்சத்து 79 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள “அம்மா மாளிகை” கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை வளாகத்தில், 1,50,000 சதுரஅடி கட்டட பரப்பளவில், ஐந்து தளங்களுடன், 800 அலுவலர்கள் பணிபுரியும் வகையில் இருக்கை வசதிகள், 500 இருக்கைகள் கொண்ட அரங்கம், 100 இருக்கைகள் கொண்ட ஆலோசனைக் கூடம், இம்மாளிகையின் அடித்தளத்தில் 50 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் 200 இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் உள்ளிட்ட வசதிகளுடன் 39 கோடியே 10 லட்சத்து 79 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் “அம்மா மாளிகை” கட்டப்பட்டுள்ளது. ரிப்பன் மாளிகையில் செயல்பட்டு வந்த மழைநீர் வடிகால் துறை, சாலைகள், பாலங்கள் மற்றும் பணிகள் துறை, சிறப்பு திட்டங்கள் துறை, இயந்திரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் துறை, மின்சாரத் துறை, பொதுத் துறை, மாவட்ட குடும்ப நலத்துறை, சட்டக் குழுமத் துறை, வருவாய்த் துறை, கல்வித்துறை, தேர்தல் துறை உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலகங்கள் இன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் திறந்து வைக்கப்பட்ட அம்மா மாளிகையில் செயல்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு எஸ்.பி.வேலுமணி, சென்னை மாநகராட்சி மேயர் திரு சைதை சா.துரைசாமி, தலைமைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு க.பணீந்திர ரெட்டி, இ.ஆப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் பி. சந்திரமோகன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 15.9.2015